**அறிமுகம்**

பொது விவகாரங்கள் மையம் (PAC) இந்தியாவுக்கான சூழலில் நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGகள்) மீது கவனம் செலுத்துகிற செயல் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறது. PAC என்பது லாபத்திற்கானதல்லாத சிந்தைத் தொட்டி, இந்தியாவில் நிர்வாகத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கான உரிமைக்கட்டளையுடன் 1994-இல் ஏற்படுத்தப்பட்டது.

பொது விவகாரங்கள் குறியீடு என்பது இந்திய மாநிலங்களில் நிர்வாகத்தின் நிறைவு மற்றும் தரத்திற்கான வருடாந்திர மதிப்பீடாகும். இந்தக் கூட்டுக் குறியீட்டின் அடிப்படையில், நிர்வாக செயல்பாடுகள் மீது மாநிலங்கள் தரவரிசைப்படுத்தப்படுகிறது. பொது விவகாரங்கள் குறியீடு 2021 என்பது பொதுக் களத்தில் கிடைக்கப் பெறும் மத்திய அரசின் தரவுகளை மட்டும் பயன்படுத்துகிற பாகுபாடற்ற, சுதந்திரமான மற்றும் ஆதாரத்தின் அடிப்படையிலான ஆய்வாகும். குறியீடுகளின் கணக்கீட்டில் அகநிலை சார்புகளை நீக்குவது பொது விவகாரங்கள் குறியீட்டின் தனிச்சிறப்பம்சமாகும், அதாவது, உருவாக்கப்படும் முடிவுகள் அறிவியல் சார்ந்த முதன்மை கூறுப் பகுப்பாய்வுக்கான கடுமையான ஆராய்ச்சிமுறையைப் (PCA) பயன்படுத்தி கணினியில் உருவாக்கப்பட்டவையாகும்..

**பொது விவகாரங்கள் குறியீடு** 2021

பொது விவகாரங்கள் குறியீடு 2021 நிலையான வளர்ச்சி, ஐந்துக் கருப்பொருட்கள் 14 நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 43 குறிகாட்டிகளின் சூழலில் நிர்வாக செயல்பாட்டினைப் பார்க்கிறது. தூண்களின் அடிப்படையிலான தரவரிசைப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு தவிர, பிஏஐ 2021 மத்திய அளவில் நிதியுதவி அளிக்கப்படும் ஐந்து திட்டங்களான - மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் (MGNREGS), தேசிய சுகாதார திட்டம் (NHM), ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (ICDS), சமக்ர சிக்ஷா அபியான் (SmSA), மற்றும் மதிய உணவுத் திட்டம் (MDMS) ஆகியவற்றின் செயலாக்கத்தின் செயல்திறனின் ஒரு மதிப்பீட்டையும் முன்னிலைப்படுத்துகிறது.

பொது விவாகரங்கள் குறியீடு 2021-ன் மற்றுமொரு முக்கிய அம்சம் என்னவென்றால் கோவிட்-19 மறுமொழி குறியீடு - பெருந்தொற்றிற்கு மாநிலங்களின் நிர்வாக மறுமொழி மற்றும் அதன் தாக்கத்தைக் குறைப்பதில் அடையப்பட்ட வெற்றியின் அளவுக்குமான ஒரு பகுப்பாய்வாகும்.

PAI 2021 வெள்ளிக்கிழமை, அக்டோபர் 29, 2021 அன்று பெங்களூருவில் துவங்கப்பட்டது. இந்தியாவில் மாநிலங்களின் நிர்வாக செயல்பாட்டினை தரவரிசைப்படுத்துகிற 6வது தொடர்ச்சியான ஆண்டாகும். பொது விவகாரங்கள் குறியீடு 2021-ன் முடிவுகள் பின்வருமாறு:

ஒட்டுமொத்த PAI 2021 குறியீடு - மதிப்பெண்கள் மற்றும் தரவரிசைகள்

| பெரிய மாநிலங்கள் | தரவரிசை | PAI 2021 குறியீட்டு மதிப்பெண் |
|---|---|---|
| கேரளா | 1 | 1.618 |
| தமிழ்நாடு | 2 | 0.897 |
| தெலங்கானா | 3 | 0.891 |
| சட்டீஸ்கர் | 4 | 0.872 |
| குஜராத் | 5 | 0.782 |
| பஞ்சாப் | 6 | 0.643 |
| கர்நாடகா | 7 | 0.121 |
| ஆந்திர பிரதேசம் | 8 | 0.077 |
| ஜார்க்கண்ட் | 9 | -0.071 |
| மத்திய பிரதேசம் | 10 | -0.113 |

| | | |
|---|---|---|
| ராஜஸ்தான் | 11 | -0.243 |
| மகாராஷ்டிரா | 12 | -0.360 |
| ஹரியானா | 13 | -0.431 |
| அசாம் | 14 | -0.459 |
| மேற்கு வங்கம் | 15 | -0.553 |
| ஒடிசா | 16 | -0.910 |
| பீகார் | 17 | -1.343 |
| உத்தர பிரதேசம் | 18 | -1.418 |

| சிறு மாநிலங்கள் | தரவரிசை | பொது விவகாரங்கள் குறியீடு 2021 குறியீட்டு மதிப்பெண் |
|---|---|---|
| சிக்கிம் | 1 | 0.907 |
| கோவா | 2 | 0.748 |
| மிஜோரம் | 3 | 0.659 |
| இமாச்சல பிரதேசம் | 4 | 0.318 |
| திரிபுரா | 5 | -0.009 |
| மேகாலயா | 6 | -0.146 |
| அருணாச்சல பிரதேசம் | 7 | -0.258 |
| நாகாலாந்து | 8 | -0.317 |
| டெல்லி | 9 | -0.476 |
| உத்தரகாண்ட் | 10 | -0.643 |
| மணிப்பூர் | 11 | -0.783 |

| யூனியன் பிரதேசங்கள் | தரவரிசை | PAI 2021 குறியீட்டு மதிப்பெண் |
|---|---|---|
| புதுச்சேரி | 1 | 1.345 |
| தாதரா & நகர் ஹவேலி மற்றும் தாமன் – டியூ | 5 | -0.445 |
| இலட்சத்தீவுகள் | 4 | -0.302 |
| ஜம்மு & காஷ்மீர் | 2 | 0.396 |
| சண்டீகர் | 3 | -0.298 |
| அந்தமான் நிகோபார் தீவுகள் | 6 | -0.696 |

**அறிக்கையின் சிறப்பம்சங்கள்:**

- பொது விவகாரங்கள் குறியீட்டுத் தொடர் என்பது மத்திய அரசின் தரவு மூலங்களை மட்டும் பயன்படுத்தி மாநிலங்களின் செயல்பாட்டிற்கான முற்றிலும் ஆதாரங்களின் அடிப்படையிலான ஒரு மதிப்பீடாகும். வெவ்வேறு வகைப் பிரிவுகளின் வெற்றியாளர்கள்:
- பெரிய மாநிலங்கள் (LS) - வெற்றியாளர்கள் - கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலங்கானா
- சிறு மாநிலங்கள் (SS) - வெற்றியாளர்கள் - சிக்கிம், கோவா மற்றும் மிஜோரம்
- யூனியன் பிரதேசங்கள் (UTகள்) - வெற்றியாளர்கள் - புதுச்சேரி, ஜம்மு மற்றும் காஷ்மீம் மற்றும் சண்டீகர்
- PAI 2021 ஒட்டுமொத்த தரவரிசைகளில், பெரிய மாநிலங்களின் வகைப்பிரிவில், கேரளா தொடர்ந்து தரவரிசையில் மேலே இருக்கிறது, அது போல, தமிழ்நாடு 2ஆம்

தரவரிசையைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது. 3வது இடத்தை PAI 2020-ல் ஆந்திர பிரதேசத்திடமிருந்து தெலுங்கான மாற்றீடு செய்துள்ளது. தெலங்கானா, ஜார்க்கண்ட் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் அவற்றின் தாய் மாநிலங்களைக் காட்டிலும் சிறப்பாக செயல்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

- தெலங்கானா, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் மற்றும் குஜராத் ஒட்டுமொத்த குறியீட்டில் நன்றாக செயல்பட்டுள்ளன, அதே சமயம் மகாராஷ்டிரா, அசாம், கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது தரவரிசையில் சறுக்கியுள்ளன.
- முதன்மை மற்றும் கடைசி செயல்பாட்டாளர்களைத் தவிர, கடந்த ஆண்டு 3வது தரநிலையில் இருந்த ஆந்திர மாநிலம், சமபங்கு மற்றும் வளர்ச்சி தூணில் தீவிரமான வீழ்ச்சி காரணமாக பொது விவகாரங்கள் குறியீடு 2021-ல் 8வது தரநிலையைப் பெற்றுள்ளது. அதே போன்று, கர்நாடாக மாநிலம் 4வது தரநிலையில் இருந்து 3 இடங்கள் கீழே 7வது தரநிலைக்கு வீழ்ந்துள்ளது. (சமபங்கு தூணில் 12வது தரநிலையில் இருந்து 16வது தரநிலைக்கு), இருப்பினும் மதிப்பெண் நேர்மறையான பக்கத்தில் இருந்து மாநிலம் தனது வளர்ச்சிப்பாதையை தக்க வைத்துக்கொள்ள ஊக்கத்தொகையை வழங்குகிறது. கடந்த ஆண்டு 9வது தரவரிசையில் இருந்த குஜராத் மாநிலம், இந்த ஆண்டு 5வது ஆக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் 12வது தரவரிசையிலிருந்து மேற்கு வங்க மாநிலம், இந்த ஆண்டு 15வது தர வரிசைக்கு சறுக்கியுள்ளது, மகாராஷ்டிர மாநிலம் கடந்த ஆண்டு 7வது இடத்திலிருந்து 12வது இடத்திற்கு சறுக்கியுள்ளது (சமபங்குத் தூணில் கடுமையான சரிவு 6வதில் இருந்து 15வதுக்கு), இது பெருந்தொற்றிலிருந்து மீள்வதற்கு மாநிலம் போராடுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் ஜார்க்கண்ட் மாநிலம் 15வதில் இருந்து 9வது தரவரிசைக்கு வந்து மிக நல்ல மேம்பாட்டினைக் கண்டுள்ளது, அதே சமயம் வளர்ச்சித் தூணில் 3வது தரவரிசையில் உள்ளது.
- பெருந்தொற்றின் குறிப்பிடத்தக்க தாக்கத்தை மாநிலங்கள் கண்டிருந்த போதிலும், டெல்டா பகுப்பாய்வு முக்கிய மேம்பாட்டு குறிகாட்டிகளின் ஒவ்வொரு ஆண்டுக்குமான வளர்ச்சியின் அடிப்படையில், ஒட்டுமொத்த தரவரிசையில் வால்முனையில் இருந்த போதிலும் ஒடிசா மற்றும் ஜார்க்கண்ட் சிறப்பான செயல்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது.
- ஒட்டுமொத்த நிர்வாக மாதிரியில் மாநிலங்களின் செயல்பாட்டுக்கு ஏற்ப திட்டக் குறியீடு மற்றும் கோவிட்-19 குறியீடு செயல்பாடும் உள்ளது. குறைந்த தனிநபர் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியு உள்ள மாநிலங்கள் மோசமான செயல்பாட்டினை காட்டியுள்ளன மற்றும் தரவரிசையின் அடிப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளன, குறிப்பாக பீகார், உத்தர பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் என்பதுடன் இந்த வெளிப்படையானப் போக்கு கோவிட்-19 மறுமொழி குறியீட்டில் கவனிக்கப்பட்டுள்ளது. பெருந்தொற்றைத் தடுப்பதற்கான மறுமொழியைப் பொறுத்தளவில் இந்த மாநிலங்கள் நன்றாக செயல்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது, இதற்கு கோவிட்-19 நிகழ்வுகளை குறைவான கண்டறிதலுக்கும், குறைவான நிகழ்வுகளின் எண்ணிக்கை, குறைவான இறப்புப் பதிவுகளுக்கு வழி வகுக்கிற மோசமான சுகாதார உள்கட்டமைப்பின் சழற்சி தன்மையும் காரணமாக இருக்கலாம்.

## PAI 2021 பற்றிய சுருக்கமான தொகுப்பு

கோவிட்-19 ஏற்படுத்திய இடையூறுகளின் பின்புலத்தில், கடந்த 2020-2021 ஆண்டில் நிர்வாகத்தில் மாநிலங்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதை புரிந்துகொள்வதற்காக பொது விவகாரங்கள் குறியீடு 2021 ஒருங்கிணைந்த அணுகுமுறையை எடுத்துள்ளது. சில மாநிலங்கள் ஏன் நன்றாக செயல்பட்டன மற்றும் சில மாநிலங்கள் குறைவாக செயல்பட்டன மற்றும் அவற்றின் செயல்பாட்டிற்கான பொறுப்பாக இருக்கும் காரணிகள் எவை என்பதைப் புரிந்து கொள்வதற்கான ஆதார அடிப்படையிலான ஒரு அணுகுமுறையை PAI 2021 எடுத்துள்ளது.

மத்திய அரசால் நிதியுதவி செய்யப்படுகிற சில முக்கியத் திட்டங்களின் மீது கவனத்தை ஈர்த்துள்ளதோடு மாநிலங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு தேவைபடுகிற திட்டங்களின் செயலாக்கத்தில் உள்ள இடைவெளிகளையும் சுட்டிக்காட்டியுள்ளது.

PAI 2021 -ன் சில முக்கிய கண்டுபிடிப்புகள்:

1. தொகுதி பகுப்பாய்வு


பகுப்பாய்வ செய்யப்பட்டத் தரவு மற்றும் கண்டுபிடிப்புகள் இந்திய மாநிலங்களை மூன்று குழுக்களாகப் பிரித்துள்ளன. இந்த மூன்று தொகுதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன:

i. **1வது தொகுதி** பெரிய மாநிலங்களான கேரளா, ஹரியானா, பஞ்சாப்பையும் அருணாச்சலப் பிரதேசம், டெல்லி, கோவா, ஹிமாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிஜோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா மற்ம் உத்தரகாண்ட் உள்ளிட்ட அனைத்து சிறிய மாநிலங்களையும் உள்ளடக்குகின்றன. இந்தத் தொகுதி வளர்ச்சி தூணால் இயக்கப்படுவதாக தோன்றுகிறது. மேற்சொன்ன மாநிலங்கள் விவசாயத்துறையிலிருந்து பண்ணை அல்லாத பிரிவுக்கு மாற்றுவதற்கான உள்கட்டமைப்பினை பொறுத்தளவில் நன்றாக செயல்பட்டுள்ளன. இந்த மாநிலங்கள் அவர்களின் செயல்திறனை ஊக்குவிக்கும் சுகாதாரம் மற்றும் கல்வி விளைவுகளின் அடிப்படையில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளன.

ii. 2**வது தொகுதி** ஆந்திர பிரதேசம், **சத்தீஸ்கர்,** குஜராத், கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் தெலங்கானா உள்ளிட்ட ஒன்பது மாநிலங்களை உள்ளடக்குகிறது. இந்த தொகுதி நிலைத்திருக்குந்தன்மைக்கான தூணில் அவற்றின் செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளன. உருவாக்கப்படும் திடக்கழிவுகளின் மேலாண்மையில், குறைவான பிஎம்**10** அளவுகளைப் பராமரிப்பதற்கு உதவும் சுத்தமான எரிபொருளைப் பயன்படுத்தும் குடும்பங்களின் உயர் சதவீததத்தில் சமுதாயத்தின் பங்களிப்பினைப் பொறுத்தளவில் மேம்பட்ட செயல்பாட்டினை இந்த மாநிலங்கள் காட்டுகின்றன.

iii. **3**வது தொகுதி அசாம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா, உத்தர பிரதேசம் மற்றும் மேற்**கு**வங்கத்தை உள்ளடக்குகிறது. வளர்ச்சித் தூணில் மிதமான செயல்பாட்டினையும் சமபங்கு மற்றும் நிலைத்திருக்குந்தன்மைக்கான தூண்களில் மோசமான செயல்பட்டினையும் கொண்டு இந்தத் தொகுதி வகைப்படுத்தப்படுகிறது. அடிப்படை உள்கட்டமைப்பான சுகாதாரம், குடிநீர், தூய சமையல் எரிபொருள் **முதலானவற்றை** வழங்குவதில் இந்த மாநிலங்கள் போராடுகின்றன. உத்தர பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்கள் பதிவு செய்யப்பட்ட வரதட்சணை இறப்புகள் மற்றும் கற்பழிப்பு வழக்குகளின் அதிக எண்ணிக்கையுடன் பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரானக் குற்றங்களைத் தீர்ப்பதில் மோசமான செயல்பாட்டினைக் காட்டியுள்ளன (**NCRB, 2019). NITI Aayog** ஆல் அடையாளம் காணப்பட்ட மொத்த ஆர்வமுள்ள **112** மாவட்டங்களில் **50.8% -**க்கு பொறுப்பாகிற **57** மாவட்டங்க**ள்.** இந்த கிளஸ்டரின் கீழ் ஆறு மாநிலங்களின் கீழ் வருகிறது என்பது சுவாரஸ்யமானது, இதன் மூலம் மோசமான செயல்படுகிற தொகுதியாக இதனைக் குறிப்பிடுவது பாதுகாப்பானதாகும்.

பார்வைக்கான தொகுதி வரைபடம் கீழே உள்ளது



(கலப்புத் தொகுதி வரைபடம்)

2. சமபங்கு
    i. சமபங்கு தூணுக்கான பெரிய மாநிலங்களின் வகைப்படுத்தலில் குஜராத் முதலில் இருக்கிறது, சிறிய மாநிலங்களின் வகைப்படுத்தலில் சிக்கிம் முதலில் இருக்கிறது மற்றும் யூனியன் பிரதேசங்களின் வகைப்படுத்தலில் புதுச்சேரி முதலில் இருக்கிறது.
    ii. உத்தர பிரதேசம் பெரிய மாநிலங்களின் வகைப்படுத்தலில் கடைசியில் உள்ளது, அருணாச்சலப் பிரதேசம் பெரிய மாநிலங்களின் வகைப்படுத்தலில் கடைசியில் உள்ளது மற்றும் தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் தமன் - டியூ யூனியன் பிரதேசங்களில் கடைசியில் உள்ளது.
    iii. மாநிலங்களின் ஒட்டுமொத்த செயல்பாடு அவை எந்த வகைப்படுத்தலில் வருகின்றன என்றில்லாமல் சமபங்கு தூணால் பெரிய அளவில் இயக்கப்படுகின்றன.
    iv. பெருந்தொற்றுக்கான பின்விளைவுகள் 1வது அலையால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாநிலங்களில் உண்மையில் பெரிய அளவில் இருந்தன, அதாவது, கர்நாடகா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு முதலியன (அறிக்கையில் விவரமாக விளக்கப்பட்டுள்ளன)

3. வளர்ச்சி
    i. இதரவரிசைகளைப் பொறுத்தளவில் மிகவும் நிலையற்ற தூண் வளர்ச்சிக்கான தூணாகும், அதில் இந்த ஆண்டு ஆச்சரியமான சேர்க்கைகள் உள்ளன.
    ii. வளர்ச்சித் தூணில் தெலங்கான பெரிய மாநிலங்களின் வகையில் முதலில் இருக்கிறது, கோவா சிறிய மாநிலங்களின் வகையில் முதலில் இருக்கிறது மற்றும் யூனியன் பிரசேதங்களின் வகையில் புதுச்சேரி முதலில் இருக்கிறது.
    iii. பெரிய மாநிலங்களின் வகையில் பீகார் கடைசியில் உள்ளது, சிறிய மாநிலங்களின் வகையில் மேகாலயா கடைசியில் உள்ளது மற்றும் யூனியன் பிரதேசங்களின் வகையில் அந்தமான மற்றும் நிகோபார் தீவுகள் கடைசியில் உள்ளது.
    iv. ஜார்க்கண்ட் இந்த தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இருப்பது ஆச்சரியமானதாகும்.
    v. பெரிய மாநிலங்கள் வகையில், வளர்ச்சி தூணில் செயல்திறன் ஒட்டுமொத்த குறியீட்டின் செயல்திறனை நோக்கி கணிசமாக பங்களிக்கிறது
    vi. சிறிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வகையில் வளர்ச்சி தூண் ஒட்டுமொத்தக் குறியீட்டில் செயல்பாட்டுக்கு மிதமான அளவு பங்களிக்கிறது.
    v. பெருந்தொற்றின் பெரிய தாக்கத்தை சந்திக்கிற மாநிலங்களும் தங்கள் வளர்ச்சி செயல்திறனில் தடுமாற்றத்தை காண்கின்றன.

4. நிலைத்திருக்குந்தன்மை
    i. நிலைத்திருக்குந்தன்மைக்கான தூணில் பெரிய மாநிலங்களின் வகையில் கேரளா முதன்மையாக உள்ளது, சிறிய மாநிலங்களின் வகையில் மிஜோரம் முதன்மையாக உள்ளது மற்றும் யூனியன் பிரதேசங்களில் புதுச்சேரி முதன்மையாக உள்ளது.
    ii. உத்தர பிரசேம் பெரிய மாநிலங்களின் வகையில் கடைசியில் உள்ளது, டெல்லி சிறிய மாநிலங்களின் வரிசையில் கடைசியில் உள்ளது மற்றும் யூனியின் பிரதேசங்களில் இலட்சத்தீவு கடைசியில் உள்ளது.
    iii. நிலைத்திருக்குந்தன்மைக்கான தூண் பெரிய மாநிலங்களில் செயல்பாட்டுக்கான இயக்கியாக உள்ளது, ஆனால் சிறிய மாநிலங்களில் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல்பாட்டில் மிதமான அளவ பாதிக்கிறது.

5. டெல்டா பகுப்பாய்வு

டெல்டா பகுப்பாய்வு ஆண்டுத்தோறும் மேம்பாட்டில் மாநில செயல்பாட்டினை முடிவுகளை வழங்குகிறது. தரவரிசைகள் 12 முக்கிய மேம்பாட்டு சுட்டிகளுக்காக கடந்த 5 முதல் 10 ஆண்டுகளுக்கு கிடைக்கப் பெறும் டெல்டா மதிப்புகளாக அளவிடுகின்றன.

i. ஒட்டுமொத்தத்தில் பெரிய மாநிலங்களின் வகையில் சட்டீஸ்கர் முதலாவதாக உள்ளது அதே சமயம் உத்தர பிரதேசம் கடைசியில் உள்ளது, சிறிய மாநிலங்களின் வகையில், நாகாலாந்து முதன்மையாக உள்ளது, அதே சமயம் மேகாலயா கடைசியில் உள்ளது.
ii. சமநிலையைப் பொறுத்தவரையில், சத்தீஸ்கரைத் தொடர்ந்து ஒடிசா மற்றும் தெலங்கானா முதன்மை செயல்பாட்டாளராக உள்ளது, அதே சமயம் ஜார்க்கண்ட், அசாம் மற்றும் உத்தர பிரதேசம் பெரிய மாநிலங்களில் கீழே உள்ளன.
iii. சிறிய மாநிலங்களைப் பொறுத்தளவில், டெல்லி முதலாவதாகவும் அதனைத் தொடர்ந்து மணிப்பூர் மற்றும் நாகாலாந்தும் உள்ளன, அதே சமயம் உத்தரகாண்ட், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் கோவா அடியில் உள்ளன.
iv. வளர்ச்சித் தூணில், தெலங்கானா, கேரளா மற்றும் மேற்கு வங்கம் டெல்டாவில் அதிக வளர்ச்சியைக் காட்டியுள்ளன, அதே சமயம் மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் பெரிய மாநிலங்களின் வகையில் அடியில் உள்ளன.
v. சிறிய மாநிலங்கள் வகையில், நாகாலாந்தைத் தொடர்ந்து சிக்கிம் மற்றும் திரிபுரா டெல்டாவில் அதிக வளர்ச்சியைக் கொண்டுள்ளன, அதே சமயம் ஹிமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் மேகாலயா அடியில் உள்ளன.
vi. நிலைத்திருக்குந்தன்மையைப் பொறுத்தளவில், பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு, கேரளா மற்றும் ஒடிசா டெல்டாவில் அதிக வளர்ச்சியைக் காட்டியுள்ளன. தெலங்கானா, அசாம் மற்றும் ஆந்திர பிரதேசம் டெல்டா தரவரிசையில் தங்கள் இடங்களை அடியில் கொண்டுள்ளன. மிஜோரம், ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் திரிபுரா சிறிய மாநிலங்களில் முதன்மையாக உள்ளன, அதே சமயம் டெல்லி, மேகாலயா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் கீழே உள்ளன.
vii. ஒடிசா மற்றும் நாகாலாந்து 12 முக்கிய மேம்பாட்டுக் குறியீடுகளின் கீழ் சிறந்த ஆண்டுதோறுமான மேம்பாட்டினைக் காட்டியுள்ளன.

6. திட்டப் பகுப்பாய்வு

திட்டப் பகுப்பாய்வு, ICDS-க்கான விதிவிலக்குடன், NHM மற்றும் MDMS பொறுத்தளவில் நான்கு ஆண்டுகளக்கான தரவுகளைப் பயன்படுத்தி காலத்தொடர்ச்சி அடிப்படையிலான மாதிரியைப் பின்பற்றுகிறது, மற்றும் MGNREGS மற்றும் SmSA பொறுத்தளவில் ஐந்து ஆண்டு தரவுகளைப் பயன்படுத்துகிறது.

- NHM
- 60:40 பிரிவு மாநிலங்களில், முதல் மூன்று செயல்பாட்டாளர்களாக கேரளா, கோவா மற்றும் தமிழ்நாடு, மற்றும் கடைசி மூன்ற செயல்பாட்டாளர்களாக உத்தர பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் பீகாரைக் கொண்டுள்ளன.
- 90:10 பிரிவு மாநிலங்களில், முதன்மை செயல்பாட்டாளர்களாக ஹிமாச்சல பிரதேசம், சிக்கிம் மற்றும் மிஜோரம் உள்ளன; மற்றும் கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாக மணிப்பூர், அசாம் மற்றும் மேகாலயா உள்ளன.

- ICDS
  - 60:40 பிரிவு மாநிலங்களில், ஒடிசா, சட்டீஸ்கர், மற்றும் மத்திய பிரதேசம் மாநிலங்கள் முதன்மை செயல்பாட்டாளர்களாக உள்ளன மற்றும் தமிழ்நாடு, தெலங்கான மற்றும் டெல்லி கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாகத் தோன்றுகின்றன.
  - 90:10 பிரிவு மாநிலங்களில், முதன்மை செயல்பாட்டாளர்களாக மணிப்பூர், அருணாச்சல பிரதேசம் மற்றும் நாகாலாந்து மாநிலங்களும் கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாக ஜம்மு & காஷ்மீர், உத்தரகாண்ட் மற்றும் ஹிமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களும் உள்ளன.
- MDMS
  - 60:40 பிரிவு மாநிலங்களில், முதல் மூன்று செயல்பாட்டாளர்களாக கோவா, மேற்கு வங்கம் மற்றும் டெல்லி மாநிலங்கள் தோன்றுகின்றன மற்றும் ஆந்திர பிரதேசம், தெலங்கானா, மற்றும் பீகார் கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாக தோன்றுகின்றன.

- 90:10 பிரிவு மாநிலங்களில், முதன்மை செயல்பாட்டாளர்களாக மிஜோரம், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் உள்ளன, கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாக ஜம்மு & காஷ்மீர், நாகாலாந்து மற்றும் அருணாச்சல பிரதேசம் உள்ளன.
  - SmSA
- மேற்கு வங்கம், பீகார் மற்றும் தமிழ்நாடு ஆகியன 60:40 பிரிவு மாநிலங்களில் முதன்மை செயல்பாட்டாளர்களாக உள்ளன; அதே சமயம் ஹரியானா, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாக உள்ளன.
- 90:10 பிரிவு மாநிலங்களில், மிஜோரம்,அசாம் மற்றும் திரிபுரா முதன்மை செயல்பாட்டாளர்களாகவம், நாகாலாந்து, ஜம்மு & காஷ்மீர் மற்றும் உத்தரகாண்ட் கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாகவும் காட்டப்படுகின்றன..
  - MGNREGS
- 60:40 பிரிவு மாநிலங்களில், முதல் மூன்று செயல்பாட்டாளர்களாக கேரளா, ஆந்திர பிரதேசம் மற்றும் ஒடிசா மாநிலங்கள் உள்ளன மற்றும் கடைசி மூன்று செயல்பாட்டாளர்களாக மத்திய பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் கோவா உள்ளன.
- 90:10 பிரிவு மாநிலங்களில், முதன்மை செயல்பாட்டாளர்களாக மிஜோரம், சிக்கிம் மற்றும் நாகாலாந்து உள்ளன மற்றும் கடைசி மூன்ற செயல்பாட்டாளர்களாக மணிப்பூர் மற்றும் அசாம் உள்ளன.

7. கோவிட்-19 மறுமொழி குறியீடு

கோவிட்-10 மறுமொழி குறியீடு என்பது , முதன்முதல் தொற்று நாட்டில் கண்டறியப்பட்டது முதல் மார்ச் 31, 2021 வரை, பெருந்தொற்றுக்கான மறுமொழியின் அடிப்படையில் இந்திய மாநிலங்களைத் தரவரிசைப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும். இந்த இரண்டு கருப்பொருள் பகதிகளான – தயார்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலை குறியீடு அதன் கீழ் உட்படுத்துகிறது.

- குறியீட்டில் முதல் 5 நிலைகளில் இருந்த மாநிலங்களில் நான்கு தென் மாநிலங்களாகும். கேரளா, தமிழ்நாடு, மற்றும் ஆந்திர பிரதேசம் முதல் 3 இடங்களை இரண்டு தூண்களிலும் நிலையான செயல்பாட்டினைக் கொண்டிருந்த தன் காரணமாக பெற்றன அதே சமயம் சர்நாடகா 5வது தரவரிசையைப் பெற்றதற்கு அதன் தயார்படுத்தலுக்கான கருப்பொருளில் மிதமான நல்ல தயார்படுத்தலே காரணமாக இருந்ததது.
- கோவிட்-19 மறுமொழி குறியீட்டில் காணப்பட்ட வெளிப்படையான போக்கு ஒப்பீட்டளவில் மோசமான பொருளாதார மற்றும் நிதி நிலை கொண்ட மாநிலங்களின் தரவரிசை ஆகும். இந்த மாநிலங்கள் குறைவான தனிநபர் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) -ஐ கொண்டிருக்கிற, பீகார், ஜார்க்கண்ட், உத்தர பிரதேசம் மற்றும் மத்திய பிரேதசம் போன்ற மாநிலங்களாகும்.
- நிர்வாகக் குறியீட்டில் 2ஆம் தரவரிசையில் இருக்கும் கோவா, கோவிட்-19 மறுமொழிக் குறியீட்டில் கடைசி தரவரிசையில் உள்ளது. முரணாக, டெல்லி தயார்படுத்தலில் வலுவான செயல்திறன் காரணமாக டெல்லி உச்சியில் இருந்தது, எனினும், அதன் கட்டுப்படுத்துதல் முயற்சிகள் காரணமாக 11 சிறிய மாநிலங்களில் 10வதாக இருந்தது.

தொடர்பு கொள்க

டாக்டர் அன்னப்பூர்ணா ரவிசந்தர் – **தலைவர், கொள்கை ஈடுபாடு மற்றும் தகவல்தொடர்பு, PAC**

மொபைல்-9880844862

மின்னஞ்சல்- annapoorna@pacindia.org